# 3.8 ஓசேயாவின் அன்பின் குரல்



கி. மு. எட்டாம் நூற்றாண்டளவில் ஓசேயா இறைவாக்கினர் வாழ்ந்தார். இறைவாக்கினருள் இவர் தனித்துவமானவர். இவர் வட அரசைச் சார்ந்தவர். தனது சொந்த வாழ்க்கையே இவர் இறைவாக்குரைப்பதற்கு உதவியாயிற்று. மக்களின் உண்மையற்றத் தன்மை, கீழ்ப்படியாமை, நம்பிக்கைத் துரோகம் என்பவற்றை உணர்த்தினார். அன்பு மன்னிப்பு ஆகியவற்றை விளக்கி மக்களை நல்வழிப்படுத்த முயன்றார்.

## ஓசேயா

ஓசேயா என்பதன் கருத்து ‘‘யாவே இரட்சித்தார் ’’ என்பதாகும்.

இவர் ஒரு விவசாயி. இறைவனிடமிருந்து பெற்ற கட்டளை ‘‘நீ போய் விலைமகள் ஒருத்தியை மணந்து பிள்ளைகளைப் பெற்றுக் கொள்’’ என்பதாகும். அவ்வாறே அவர் கோமேர் என்ற பெண்ணை மணந்தார். கோமேர் பிள்ளைகள் மூவரைப் பெற்றாள். அந்தப் பிள்ளளைகளின் பெயர்கள் மூலம் இறைவன் இஸ்ரயேல் மக்களுக்குத் தன் செய்தியை வெளிப்படுத்தினார். மூன்றாவது மகனுக்கு ‘‘லோ அம்மி’’ என்று பெயரிடு எனக்கூறி ‘‘நீங்கள் என் மக்களல்ல’’ என்று விளக்கினார். இது அப்போது இறைவனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும், இடையே உள்ள விரிசல் உறவை விளக்கியது.



வாசிப்போம்
ஓசேயா 11:1 - 8



இலவச விநியோகத்திற்காக

## ஒசேயாவின் இஸ்ரயேல் மக்களுக்கான அறைகூவல்

இஸ்ரயேல் நாட்டு மக்கள் தீயச் செயல்களான ஏழைகளை ஒடுக்குதல் மற்றும் பாலியல் குற்றங்கள் போன்ற நடத்தைகளில் ஈடுபட்டனர். அவர்கள் நடுவில் நல்ல செயல்கள் மிகவும் குறைந்து காணப்பட்டது. இவைகள் மக்கள் இறைவனைவிட்டு விலகிச் செல்லக் கூடியனவாக இருந்ததென்பதை ஒசேயா அறிந்தார்.

தன்னை விட்டுப் பிரிந்து சென்று பாகால் தெய்வத்தை வழிபடும் போது இறைவனுக்கு ஏற்படும் உணர்வை அவர் புரிந்து கொண்டார். பாகால் தெய்வத்தை வழிபடும் மக்களுக்கு மன்னிப்பளித்து தம்மோடு இணைத்துக் கொள்ள முயல்வது இறைவன் மக்கள் மீதிருந்த எல்லையற்ற அன்பினாலாகும். ஓசேயா இஸ்ரயேல் மக்களை மனந்திரும்பும் படி அழைக்கிறார். சீனாய் உடன்படிக்கையை திருமண ஒப்பந்தத்தோடு ஒப்பிடுகிறார்.



வாருங்கள் ஆண்டவரிடம் நாம் திரும்புவோம்; நம்மைக் காயப்படுத்தியவர் அவரே. அவரே நம்மை குணமாக்குவார்; நாம் அறிவடைவோமாக, ஆண்டவரைப் பற்றி அறிய முனைந்திடுவோமாக
ஒசேயா 6:1-3

என்று கூறி இறைவனை அறிந்து கொள்ளும்படி ஒசேயா அழைக்கிறார். இறைவன் அவர்களுக்கு அன்பு காட்டுவார் என்கிறார்.

நாம் கடவுள் மீது முழுமையாய் அன்பு கொள்ள வேண்டும். அதே வண்ணம் மக்கள் மீதும் தன்னலமற்ற முறையில் அன்பு செலுத்த வேண்டும். நாம் தீமையான செயல்களில் ஈடுபடும் ஒவ்வொரு வேளையிலும் கடவுள் கவலையடைகிறார். ஆனால் மீண்டும் நமது பாவச் செயல்களை கடவுள் மன்னித்து மீட்டுக்கொள்கிறார். அதற்கு நன்றியுடையவர்களாய் நமது பாவ வாழ்க்கையை விட்டு, அவர் விரும்பும் நல் வாழ்கையை வாழ வேண்டும்.

- ✪ உண்மையாகவே நமது தவறுகளைப் பற்றி கவலைப்படுதல் வேண்டும்.
- ✪ மீண்டும் அதனைச் செய்யாமல் இருப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும்.
- ✪ செய்த தவறுகளை சரி செய்து கொள்வதற்கு இறைமன்னிப்பை நாட வேண்டும்.
- ✪ நம்மால் பாதிக்கப்பட்டவர்களோடு உறவை சீர் செய்து கொள்ள வேண்டும்.
- ✪ பாதிப்புக்குள்ளனவர்களுக்கு இழப்பீடு செலுத்த முன்வருதல் வேண்டும்.



இலவச விநியோகத்திற்காக

## உண்மையாகவே செய்த தவறுகளுக்காக மனம் வருந்துதல்

நாம் செய்த தவறுகளை வெளிப்படையாகக் காட்ட வேண்டிய தேவையில்லை. இறைவனிடம் கூறலாம். மன்னிப்பையும் பெற்றுக்கொள்ளலாம். திரும்பத் திரும்ப பிழைகளைச் செய்து இறை மன்னிப்பை வேண்டுவது உசிதமல்ல. அறியாமல் செய்த பாவங்களுக்காக இறைவனிடம் வேண்டினால் இறைவன் மன்னிப்பருள்வார். மீண்டும் தவறுகள் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் பிறர் பிழைகளை அவர்களிடம் அமைதியான முறையில் சுட்டிக்காட்ட முயற்சிக்க வேண்டும். நண்பர்கள் நம்மிடம் கோபித்துக் கொண்டால் அவர்களிடம் போய் தவறுகளைக் கூறி மன்னிப்புக்கோரி இருவரும் நண்பர்களாகுவதே நமது பொறுப்பாகும். மனம் வருந்துதல் என்பது கடவுளிடம் செய்யப்படும் ஓர் பாவ அறிக்கையோடு நிறைவு பெறும் ஒன்றல்ல. பழைய ஏற்பாட்டில் யாக்கோபு தன்னால் பாதிக்கப்பட்ட தன் அண்ணன் ஏசாவுடன் ஒப்புரவு கொள்வதுடன் அவருக்கு பல வெகுமதிகளை அளித்து இழப்பீடு செய்ய முன்வருவதைக் கவனத்திற் கொள்வது சிறப்பாகும். (தொடக்க நூல் 32:13-20) இவ்வாறான அன்பின் மன்னிப்பு என்றும் நிலைத்து நிற்கும்.

### செயல்பாடு

*1* *'வாழ்க்கையில் கடவுள் வழங்கும் மன்னிப்பு இன்றியமையாதது' என்பதை விளக்கும் ஓர் கவிதை புனைக.*

*2* *இறை அன்பை வெளிப்படுத்தும் ஒரு உவமைக் கதையை நாடகமாக நடிக்கவும்.*